1993 ஏப்ரல் 7]

275—

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து கொண்டோருக்கு வேலைவாய்ப்பு அளித்தல்.

*16601—திரு ஏ. ரவிக்குமார் :
டாக்டர் எஸ். சுந்தரராஜ்,

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து 10 ஆண்டுகள் முடித்திருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து பத்து ஆண்டுகள் முடித்திருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க தனியான திட்டம் ஏதும் தற்போது இல்லை.

திரு. ஏ. ரவிக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து 10 ஆண்டுகள் ஆகியும் வேலை வாய்ப்பு கிடைக்காத நிலையில் தங்களுடைய எதிர்காலமே இருண்டு, கேள்விக் குறியாகிக் கொண்டிருக்கிற ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வாழ்வளிக்கிற வகையில், தமிழகத்தில் பல்வேறு நலத் திட்டங்கள் கேள்விக் குறியாக இருந்ததை மாற்றி இன்றைய தினம் அந்த கேள்விக் குறிகளுக்கெல்லாம் முற்றுப் புள்ளி வைத்துக் கொண்டிருக்கிற நம்முடைய இதய தெய்வத்தின் பொற்கால ஆட்சியில் இந்த 10 ஆண்டு முடித்தவர்களுக்கு வாழ்வளிக்கிற வகையில் அரசு சிறப்புத் திட்டத்தை நிறைவேற்றி ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது வேலை வாய்ப்பு அலுவலகங்களின் மூலமாக பதிவு மூப்பு, கல்வித் தகுதி வகுப்பு இன சுழற்சி ஆகியவற்றின் அடிப்படையில்தான் வேலை கேட்டு வருபவர்களுக்கு இன்டர்வியூ அனுப்பப்படுகிறது. எனவே இதற்காக எந்த விதமான சிறப்புத் தகுதிகள் கிடையாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து பத்தாண்டுகள் முடித்திருப்பவர்கள் எத்தனை பேர்? அத்துடன் பப்ளிக் செக்டார், பிரைவேட் செக்டார் என்று பார்க்காமல் அவர்களுக்குக் கட்டாய வேலை வாய்ப்பு உத்தரவாதம் கொடுக்கவும், வரும் காலங்களில் இவ்வாறு பதிவு செய்து 10 ஆண்டு முடித்ததவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து கட்டாயம் அவர்களை பணியமர்த்துகிற வகையில் ஏதாவது திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1—1—1992 தேதிப்படி தமிழ்நாட்டில் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து 10 ஆண்டுகளுக்கு மேலாகக் காத்திருப்போரின் எண்ணிக்கை 2,73,319 ஆகும். அடுத்து தனியார்களை நீங்கள் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாகத்தான் பணியாளர்களை வேலைக்கு அமர்த்த வேண்டும் என்று நாம் கட்டாயப்படுத்த முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. தென்னவன்.

திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வேலையற்றோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர் பிறை போல வளர்ந்து கொண்டிருக்கிறது. பதிவு செய்து 10 ஆண்டுகளுக்குப் பின்னும் வேலை வாய்ப்பு பெற முடியாமல் இருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் இருப்பவர்கள் அந்த மாவட்டத்திலே வேலை வாய்ப்பு பெறுவதற்காக மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்கள் ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தாலும் பிற மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இந்த மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களில் 'கேர் ஆப் அட்ரஸ்' கொடுத்து பதிவு செய்கிறார்கள். அதனால் அந்த மாவட்டத்தில் ஏதாவது பணிக்கு இன்டர்வியு வந்தால் அப்போது அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பின்னுக்கு தள்ளப்படுகிற சூழ்நிலை உருவாகிறது. ஆகவே வருங்காலங்களில் அந்தந்த மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்குத்தான் வேலை வாய்ப்பு கொடுக்கவேண்டுமென்ற நிலையை உருவாக்குகிற வகையில் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பெயர்களைப் பதிவு செய்கிறபோது குடும்ப அட்டையிலே அவர்களுடைய பெயர் இருக்கிறதா என்பது பரிசீலிக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களில் அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தான் தங்களைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள், சிலர் இது போன்று

வேலை வாய்ப்புக்காக பிற மாவட்டங்களில் கேர் ஆஃப் அட்ரஸ்'' மூலமாக பதிவு செய்திருப்பது தெரியும். எனவே குடும்ப அட்டை கொண்டு வர வேண்டும் என்று கட்டாயப் படுத்த வேண்டும் என்கிற நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி பிட்ரிக்ஸ் டி'சோசா.

முற்பகல் 10.55

DR. BEATRIX D'SOUZA: Honourable Speaker, Sir, Will the Government consider separate registration for women in the employment exchanges to facilitate speedy recruitment under the quota for women in the Government Service?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக இன்றைக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதே மிகவும் குறைவாக இருக்கிறது. ஏனென்று சொன்னால் பொதுத் துறைகளில் ஏற்படுகின்ற பெரு வாரியான காலியிடங்கள் எல்லாம் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மற்ற நிறுவனங்கள் மூலமாகத் தான் நிரப்பப்படுகின்றன. எனவே இன்றைக்கு வேலை வாய்ப்பு அலுவலகங்களில் உள்ளவர்களுக்கு காத்திருப்பவர்களுக்குரிய வேலை வாய்ப்பை உருவாக்கித் தர சூழ்நிலை இல்லாத நிலையில் பெண்களுக்கு என ஒவ்வொரு இடத்திலேயும் தனித் தனியாக வேலை வாய்ப்பு அலுவலகங்களை உருவாக்கித் தர இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 276, திரு ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

276—

கல்வராயன் மலையில் ஐப்பானிய காடை குஞ்சு பொறிப்பு வளர்ப்புப் பண்ணை நிறுவுதல்.

*10303—திரு. ஆர். பி. பரமசிவம்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், கல்வராயன் மலையில் டாப்கோ மூலம் ஐப்பானிய காடை குஞ்சு பொறிப்பு மற்றும் வளர்ப்பு பண்ணை நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம், எனில், விவரம் என்ன?